# DEPOSITION OF WITNESS
# In the Court of Judicial Magistrate No.I, Mettur
# Case No : C.C.No. 242/2022

Prosecution witness : **அ.சா.1** **Date : 01.06.2023**

| | |
|---|---|
| **Name : பாப்பாத்தி** | Caste : MBC |
| **Husband's Name : கந்தசாமி** | Calling : கூலி |
| Village : கரிக்காப்பட்டி | Religion : இந்து |
| Taluk : மேட்டுர் | Age : 55 |

( A1 to A4 absent. Filed 317 CrPC petition and allowed))

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் கரிக்காப்பட்டி கிராமம் கள்ளிக்காரன் வளவில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். எதிரிகள் நால்வரும் எனது சொந்தக்காரர்கள். 2 வது எதிரி கணேசன் என் மருமகளின் தகப்பனார். மற்ற எதிரிகள் என் மருமகளின் உறவினர்கள். கடந்த 3 வருடங்களுக்கு முன்னர் என் மகனுக்கு பூங்கொடி என்ற பெண்ணை பார்த்து பெரியோர்களால் திருமணம் செய்து வைக்கப்பட்டது. எனது மகனுக்கும் மருமகளுக்கும் அடிக்கடி சண்டை ஏற்பட்டு பிரச்சினை இருந்து வந்தது. என் மகனை மருகளின் உறவினர்கள் அடித்துவிட்டார்கள். கடந்த 3 வருடங்களுக்கு முன்பு மதியம் 12.30 மணியிலிருந்து 1.00 மணி இருக்கம் இது சம்மந்தமாக நியாயம் பேச நங்கவள்ளியை சேர்ந்த சேர்மன் பாலு என்பவரின் வீட்டில் பேசிக்கொண்டிருந்தோம். பாலு என் மகனையும், மருமகளையும் வைத்து பேசிக்கொண்டிருந்தார். நான் வெளியே நின்றுகொண்டிருந்தேன். அப்போது எதிரி சக்திவேல் உன்னால்தாண்டி எல்லாம் ஆனது என்று கெட்ட வார்த்தையால் திட்டி கம்பியால் எனது பின்மண்டையின் மீது அடித்து ரத்தம் வந்தது. எதிரி கணேசன் என் மயிரை பிடித்து இழுத்து அடித்தார். எதிரி வேலு என்பவர் என் முடியை பிடித்து அடித்துவிட்டார் காலாலும் உதைத்தார். எதிரி அலமேலு என் முடியை பிடித்து இழுத்து அடித்து கொன்னேபுடுவேன் என்று மிரட்டினார். இதனால் எனக்கு என் கழுத்து பகுதி,

தலையின் பின் மண்டை பகுதி மற்றும் கை பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டது. சத்தம் கேட்டு வெளியே வந்த பாலு என்னை மருத்துவமனைக்கு செல்லுமாறு சொன்னார். நான் எடப்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். இது சம்மந்தமாக நங்கவள்ளி போலிசார் என்னை மருத்துவமனையில் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான். நான் சொல்ல சொல்ல போலிசார் விசாரித்து எழுதிக்கொண்டார்கள். **(புகார் வாக்குமூலம் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** எதிரிகளை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். அவர்கள் இன்று இங்கு ஆஜரில் இல்லை.

**எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**ஒம்/—அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**